# புனித மதலேன் சோபி (BARAT) (1779-1865)

பிரான்ஸ் நாட்டில் நடந்த பயங்கரத்துக்குரிய புரட்சி முடிந்ததும் இவள் ஒரு கன்னியர் சபையை நிறுவினாள். அதை இயேசுவின் திரு இருதயத்திற்கு அர்ப்பணித்தாள். “கன்னியர் செபிக்கவேண்டும். தவமுயற்சிகள் செய்ய வேண்டும். இளம் பெண்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும்”. மதலேன் சோபி அபூர்வ திறமை வாய்ந்தவள். அடிக்கடி செபித்து கடவுளது உதவியைத் தேடுவாள். சலிப்பின்றி ஆர்வத்துடன் உழைப்பாள். அநேக பள்ளிக்கூடங்களையும், பெண்களுக்கென விடுதிகளையும், பெண்கள் ஞான ஒடுக்கம் செய்வதற்கென்று பல இல்லங்களையும் ஆசிரியர்களைத் தயாரிக்க பள்ளிகளையும், சபையில் சேர விரும்புகிறவர்களைப் பக்குவப்படுத்துவதற்காக தனிப் பள்ளிகளையும் தோடங்கினாள்.

**சிந்தனை:**

“ஒவ்வொரு நாளும் தாழ்ச்சி முயற்சி ஒன்றாவது செய். அது இல்லாத நாளை வீணானதாகக் கருது”. கடவுள் ஒருவரை நேசிக்கும்பொழுது சிலுவையடியில் மரியாளுடன் நிற்கும்படி அவருக்கென்று ஓர் இடம் தயாரிக்கிறார். (புனித மதலேன் சோபி)

**செபம்:**

ஆண்டவரே, எங்களுக்காகவும், பாவிகளுக்காகவும் அடிக்கடி செபிக்க பரித்தியாகங்கள் செய்யும் வரத்தை தாரும்.